சென்னை, கோட்டுப்புரம் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, கோ ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களுக்கு, தமிழ்நாடு அரசப் பணியாளர் தேர்வாணையம் வாயிலாக புதியதாக தெரிவு செய்யப்பட்ட 166 உதவி விற்பனையாளர்களுக்கு 2 நாட்கள் பயிற்சி முகாமினை நேற்று (04.04.2025) தொடங்கி வைத்து, அவர்களுடன் கலந்துரையாடினார். இந்நிகழ்ச்சியில், கைத்தறிகைத்திறன், துணிநூல் மற்றும் சுதர்த் துறை அரசு செயலாளர் திருமதி. வே. அமுதவல்லி, கைத்தறி துறை இயக்குநர் திருமதி. மகேஸ்வரி ரவிக்குமார், கோஆப்டெக்ஸ் மேலாண்மை இயக்குநர் தீபக் ஜேக்கப், மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

‘‘தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்’’!

தஞ்சை வடக்கு மாவட்டம் முழுமைக்கும் சுவர் விளம்பரம் செய்வீர்!

மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. அறிக்கை!

தஞ்சாவூர், ஏப்.5- தமிழ்நாடு முதல்வர், கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க பாசிஜ பா.ஜ.க ஒன்றிய அரசின் மக்கள் விரோத போக்கை மக்களிடம் எடுத்துரைக்கும் வகையில் தஞ்சை வடக்கு மாவட்டம் முழுமைக்கும் சுவர் விளம்பரம் செய்திட கழக தோழர்களுக்கு வேண்டுகோள் விடுத்து தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு :

தமிழ்நாடு மட்டுமின்றி ஒட்டுமொத்த தென் மாநிலங்களின் குரலை நசுக்கும் முயற்சிதான் தொகுதி மறுசீரமைப்பு என்பது ஒட்டுமொத்த நாடாளு மன்றத்தில் 7.18% உறுப்பினர்களைக் கொண்டிருக்கும் போதே தமிழ்நாட்டின் உரிமைகளைப் பெற நாம் போராட வேண்டியிருக்கிறது. தொகுதி மறுசீரமைப்பு என்ற பெயரில் நமது அரசியல் பிரதி நிதித்துவம் குறைந்தால் ஒன்றிய அளவில் முற்றிலும் நமது குரல் நசுக்கப்படும் என்பதை உணர்ந்து நம் தலைவரின் பின்னால் பல்வேறு மாநில அரசுகளும் கட்சிகளும் அணிதிரண்டுள்ள செய்தியையும் மக்களிடத்தில் கொண்டு சேர்க்கும் வகையில் மாநகர, ஒன்றிய, பேரூர், மாநகர பகுதி வட்ட கழகங்களில் சுவர் விளம்பரங்களை குறிப்பாக தேசிய மாநில நெடுஞ்சாலைகளிலும் மக்கள் கூடும் முக்கிய இடங்களில் அமைத்திட கேட்டுக் கொள்ளப்படுகிறது.

1. இந்தித் திணிப்பு நிதிப்பகிர்வில் பாரபட்சம் மற்றும் தொகுதி மறுசீரமைப்பில் அநீதி இவற்றை எதிர்த்து தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும்!

2. வேண்டாம் வேண்டாம் தொகுதி மறுசீரமைப்பு வேண்டாம்.

3. தமிழ்நாட்டின் நலன்களையும் எதிர்காலத்தையும் யாருக்காகவும் எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம்.

4. தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுப்பட்டு போராடுவோம்.

#FairDelimitation தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும்!

என்ற வரிகள் விளம்பரங்களில் கட்டாயம் இடம் பெறும் வகையில் அமைத்திட கேட்டுக் கொள்கிறேன். மேலும் மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் செயலாளர் தங்ளது பகுதிகளில் செய்யப்பட்டுள்ள சுவர் விளம்பரங்களை புகைப்படம் எடுத்து மாவட்டக் கழகத்திடம் வழங்கிடவும் கேட்டு கொள்கிறேன்.

இவ்வாறு தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி அறிக்கை வெளியிட்டுள்ளார்.

தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க. ஆலோசனைக் கூட்டம்!

மாவட்ட கழக செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் அறிக்கை!

தருமபுரி, ஏப். 5 - தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு: -

தருமபுரி மேற்கு மாவட்டம், பாலக்கோடு சட்டமன்றத் தொகுதி மேற்பார்வையாளர் மாநில விவசாய அணி துணை செயலாளர் டி.எம்.அரியப்பன், அரூர் சட்டமன்றத் தொகுதி மேற்பார்வையாளர் மாநில அமைப்புச்சாரா ஓட்டுநர் அணி துணை செயலாளர் சி.செல்லதுரை மற்றும் பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதி மேற்பார்வையாளர், திருவண்ணா மலை வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எவரெஸ்ட் என்.நரேஷ்குமார் ஆகியோர்களின் முன்னிலையில் வாக்குச்சாவடி முகவர்கள் (BLA2), வாக்குச்சாவடி நிலை குழு உறுப்பினர்கள் (BLC) ஆகியோர்களை தேர்தல் களப்பணிக்கு உட்படுத்த மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணியின் மூலம் (Whatsapp Channel Link)ல் கழக உறுப்பினர்களை இணைக்கும் பணி, BLA2 மற்றும் BLC ஆய்வுக்கூட்டம் போன்ற தேர்தல் பணிகள் குறித்து இன்று (05.04.2025 - சனிக்கிழமை) காலை 10.00 மணியளவில் காரிமங்கலம், மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட கழக செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெறவுள்ளது.

அதுசமயம், மாநில, மாவட்ட கழக நிர்வாகிகளும், ஒன்றிய கழக செயலாளர்களும், பேரூர் கழக செயலாளர்களும், மற்றும் தகவல் தொழில்நுட்ப அணி, இளைஞரணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, மாணவர் அணி ஆகிய அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துக்கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: தேர்தல் களப்பணிகள் குறித்தும், BLA2 மற்றும் BLC ஆய்வுக் கூட்டம் குறித்தும்

இவ்வாறு தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் தெரிவித்துள்ளார்.

ஏ.ஜெ. பவுல் தலைமையில் என்.இ.கே.மூர்த்தி வரவேற்பில்

திருவேற்காட்டியில் மாபெரும் கால்பந்து போட்டி!

அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன்- ஆவடி சா.மு.நாசர் துவக்கி வைத்து பரிசு வழங்குகிறார்கள்!

திருவள்ளூர், ஏப்.05 திருவள்ளூர் மத்திய மாவட்டம் வர்த்தக அணி மற்றும் 7 வது வார்டு திமுக சார்பில் கழக தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் ஒரு நாள் எழுவர் கால்பந்து போட்டி மாவட்ட அமைப்பாளர் ஏ.ஜெ.பவுல் தலைமையில் நாளை (6.4.2025 - ஞாயிற்றுக் கிழமை) காலை 7 மணியளவில் நடைபெறுகிறது.

நகரக் கழகச் செயலாளர் என்.இ.கே.மூர்த்தி வரவேற்பு உரையாற்றுகிறார்.

மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன், தலைமை செயற்குழு உறுப்பினர் செ. சங்கர், வார்டு செயலாளர் மா.வினாயகம், சி.தெய்வ சிகாமணி, ப.ருக்மணிபவுல், ஐ.ஜேக்கப், க.கனகராஜ், எம். ராம்பாபு, பரமசிவம், தாமோதரன், டி.மூர்த்தி, பூவை சாபி, கே.பி.எஸ். இளைராஜா,ஜோசப், எஸ். சுரேஷ், சரவணன், ஆனந்தராஜ், கார்த்திக், முரளி கிருஷ்ணன், மகேஷ்குமார், ஏ.பி. செல்லதுரை, வெங்கடேசன், தியாகராஜன் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

நிகழ்ச்சியில் அமைச்சர்கள் மா.சுப்பிரமணியம், ஆவடி சாமு.நாசர் ஆகியோர் கலந்து கொண்டு வெற்றி பெற்ற அணிகளுக்கு பல் வேறு பரிசுகள் வழங்குகிறார்கள்.

இதில் சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, மாநில வர்த்தக அணி செயலாளர் காசி முத்து மாணிக்கம், தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாநில சிறுபான்மையினர் அணி இணை செயலாளர் சி. ஜெரால்டு, மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் பலர் கலந்து கொள்கிறார்கள்.

த.ஜெயகுமார் தலைமை! அமைச்சர் தா.மோ. அன்பரசன் – பேராசிரியர் சுப.வீரபாண்டியன் சிறப்புரை!

பம்மல் வடக்கு பகுதியில் மாபெரும் பொதுக்கூட்டம்! கழக முன்னோடிகளுக்கு கணையாழி - பொற்கிழி!

இ.கருணாநிதி எம்.எல்.ஏ. – எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. - மேயர் க.வசந்தகுமாரி - கோ.காமராஜ் - வே.கருணாநிதி பங்கேற்பு!

காஞ்சிபுரம், ஏப். 5 - காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், தாம்பரம் மாநகரம், பம்மல் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாள் விழா மாபெரும் பொதுக் கூட்டம் மற்றும் கழகத்திற்காக களம் பல கண்ட கழக முன்னோடிகளுக்கு கணையாழி அணிவித்தல் பொற்கிழி வழங்கும் விழா 3.4. 2025 வியாழக் கிழமையன்று மாலை 6 மணியளவில் துர்கா நகர் மெயின் ரோடு, துர்கா நகர் இலட்சுமிபுரம் சந்திப்பில் (பச்சை மலை அருகில்) நடைபெற்றது.

இப்பொதுக்கூட்டத்திற்கு பம்மல் வடக்கு பகுதி தி.மு.க. செயலாளர் திருநீர்மலை த.ஜெயகுமார் தலைமை வகித்தார்.

கே.சந்திரன், எஸ்.கே. நெப்போலியன், மு.ஸ்ரீதர், க.ஜெயசீலன், ஜி.பப்பிதா, ச.பிரபு, சி.பார்த்தசாரதி, இரா.குமரேசன், இரா. பாபுஜி, க.சுந்தரமூர்த்தி, மு.நித்தியானந்தம், இரா. நரேஷ்கண்ணா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

துணை மேயர் கோ. காமராஜ், இரா.நரேஷ் கண்ணா எம்.சி., இ. பாலாஜி ஆகியோர் வரவேற்புரையாற்றினர்.

இப்பொதுக் கூட்டத்தில் திராவிட இயக்க தமிழர் பேரவை தலைவர் சமூகநீதி கண்காணிப்புக் குழு தலைவர் பேராசிரியர் சுப. வீரபாண்டியன், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் கழக முன்னோடிகளுக்கு கணையாழி அணிவித்து பொற்கிழி வழங்கி சிறப்புரையாற்றினர்.

இப்பொதுக் கூட்டத்தில் இ.கருணாநிதி எம்.எல்.ஏ., எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., மேயர் திருமதி க.வசந்தகுமாரி, வே.கருணாநிதி, இ.ஜோசப் அண்ணாதுரை, எஸ்.சேகர், ஆதிமாறன், ஜி.கே.விவேகானந்தன் (எ) ரவி, ஆ.நடராசன், இ.எஸ்.பெர்னார்ட், ஏ.கே.கருணாகரன், இரா. சுரேஷ், அ.தமிழ்மாறன், எஸ்.சதீஷ், டி.பாபு, இரா. பொன்ராம், வ.விஜய ரங்கன், பொன்.சதாசிவம், க. தேவேந்திரன், ஆர்.எஸ்.சங்கர், மு.ரஞ்சன், கோல்டு டி. பிரகாஷ், பேராசிரியர் எல். பிரபு, வி.ரவிச்சந்திரன், சி.கே.ஜெகதீஸ்வரன், பி. பிரசாத், பா.டில்லி, க.தன சேகரன், த.ராஜாராமன், க.ரமேஷ், மு.நாகலிங்கம், ப.அன்பழகன்; க.மோகன், மு.நி.தமிழ்குமரன், ப. ஆண்டவன், டி.எம். ஜோசப், கலைவாணிபிரபு, வாணிஸ்ரீவிஜயகுமார், சித்ராதமிழ்குமரன், சண்முக சுந்தரிஜெயகுமார், சித்ரா தேவிமுரளிதரன், பாபு முத்துமீரான், கோ.ஜானகிராமன், சத்தியபிரபு, விக்கி (எ) விக்னேஷ்வரன், வீ. கார்த்திக், ஜெ.இன்சமாம், ச.இராஜேஷ், வே.சிவ சுப்பிரமணியன், ஆர்.எஸ். கிருத்திகாதேவி, ஆர்.உமா சங்கர், கா.ரவி, ந.மூவேந்தன், க.பசுபதி, சா.குணா, பி.சிவசங்கரய்யா, மலர் மு.கருணாநிதி, எஸ்.சிவா, சௌ.ஆரோக்கியராஜ், எஸ்.லாசர், எம்.சரவணன், எம்.டி.விஜயகுமார், செ. சுதாகர், எம்.கிருத்திகா, ஜி.கே.அரவிந்த்ராஜ், தி.ச.நடராஜன், எஸ். மௌலிராஜன், ப.டேனியல்சந்துரு, மோ.சுதாகர், எச்.கே.வெங்கடேசன், பி.பிரபாகரன், எம்.சக்தி, க.செல்வராஜ், அ.விநாயக மூர்த்தி, ஜெ.மஞ்சு, ஆர். ராஜா, டி.புருஷோத்தமன், ஆர்.இளங்கோவன், மணல் எஸ்.செல்வம், பா.வனஜா தயாளன், உஷாமாரி முத்து, அனிதாஇளங்கோவன், ஜனனிசுரேஷ்பாபு, எம்.மாரிமுத்து, ச.மனோகர், மகி.மனோகரன், வி. ஜோசப், பி.மோகன், எம். அரவிந்த், எம்.பி.பிரகாஷ், அ.சுனில்மேத்யூ, அமுதா அந்தோணி, கமலாசக்தி உள்ளிட்ட கழகத்தினர் பலர் பங்கேற்றனர்.

ஞா.பிரபு, ஆ. செந்தில் குமார், ஆர்.முரளிதரன், எம்.சுரேஷ்குமார் ஆகியோர் நன்றி கூறினர்.

நிகழ்ச்சி ஏற்பாட்டை பம்மல் வடக்குப் பகுதி தி.மு.க. செய்தது.

பொன்னேரி ஜி.ரவிக்குமார் – மீஞ்சூர் க.சு.தமிழ் உதயன் ஏற்பாட்டில்

பொன்னேரி நகரம் - மீஞ்சூர் பேரூர் கழக தி.மு.க. சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் - மாவட்ட பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் சிறப்புரை!

திருவள்ளூர் ஏப் 05;- திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் பொன்னேரி நகர திமுக சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் நகரக் கழக செயலாளர் ஜி.ரவிக்குமார் ஏற்பாட்டில் நகர அவைத் தலைவர் ஜி. செங்கல்வராயன் தலைமையில் இன்று (05.04.2025 - சனிக்கிழமை) காலை 10 மணி அளவில் பொன்னேரி வெங்கடேஸ்வரா திருமண மண்டபத்திலும்

மீஞ்சூர் பேரூர் கழக திமுக சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டமும் பேரூர் கழகச் செயலாளர் க.சு.தமிழ் உதயன் ஏற்பாட்டில் இன்று 05-04-2025 மதியம் 2 மணி அளவில் மீஞ்சூர் வள்ளுவர் வாசுகி திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது

இதில் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழும் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் - திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் எம்.எஸ். கே.ரமேஷ் ராஜ் ஆகியோர் கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றுகிறார்கள்

கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி.ஜெ. கோவிந்தராஜன், மாநில மாவட்ட நிர்வாகிகள் இ.ஏ.பி.சிவாஜி, மு.பகலவன், ஜெ.மூர்த்தி, சி.எச்.சேகர், கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, மு.கதிரவன், எம்.எல்.ரவி, எஸ்.ரமேஷ், கே.பரிமளம் விஸ்வநாதன், கே.சுப்பிரமணி, ஏவி.இராமமூர்த்தி, பி.வெங்கடாஜலபதி பா.செ. குணசேகரன், தமிழ் க.அமுதரசன், கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், வெ.அன்பு வண்ணன், ஜி.ஸ்டாலின், ஏ.கே.சுரேஷ், தே.உதயசூரியன், ஒன்றிய நகர பேரூர் செயலாளர்கள் காசு.ஜெகதீசன், நா.செல்வ சேகரன், எம்.முரளி தரன், மு.மணிபாலன், டி.கே.சந்திர சேகர், கி.வே.ஆனந்த் குமார், நா.பரிமளம், ஆ.சத்தியவேலு, ஜான் பொன்னுசாமி, பி. முத்து, இரா.அறிவழகன், ருக்மணி மோகன்ராஜ் பொன்னேரி நகரக் கழக நிர்வாகிகள் வாசுதேவன், நீலகண்டன் , பரிதாஜெகன், ஆர்.ராமலிங்கம்,

ஜவகர் மீஞ்சூர் பேரூர் கழக நிர்வாகிகள் ப.அலெக்சாண்டர், ராஜேந்திரன், லெனின் , சசிகுமார், மணி மாறன், மோகன், கணேஷ், ஜோதி ஸ்ரீதரன், டில்லி, புருஷோத்தமன், அன்சர் பாஷா, சாமிவேல், மதன்குமார், உள்பட மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் வார்டு கழகச் செயலாளர்கள் நிர்வாகிகள் கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்கிறார்கள்.

சென்னை தெற்கு மாவட்டம் மதுரவாயல் வடக்கு பகுதி அம்பத்தூர் மண்டலம் 92 வது வார்டில் பெருநகர் சென்னை மாநகராட்சி நிதியின் கீழ் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அடிக்கல் நாட்டு விழா 92 வது வட்ட கழக செயலாளர் எம்.எம்.ஜெயரத்தினம் தலைமையிலும் மதுரவாயல் வடக்கு பகுதி செயலாளரும் 11 வது மண்டலகுழு தலைவர் நொளம்பூர் வே.ராஜன் முன்னிலையில் மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம் பாக்கம் க.கணபதி, தலைமை செயற்குழு உறுப்பினரும் 7 வது மண்டலகுழு தலைவர் பி.கே.மூர்த்தி, 92 வது வார்டு மாமன்ற உறுப்பினர் கே.வி.திலகர் ஆகியோர் அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்கள். இதில் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

குளித்தலை தொகுதி-

தோகை மலையில் இருந்து கரூருக்கு புதிய பேருந்து வழித்தடம் தாரீர்!

சட்டப்பேரவையில் – இரா.மாணிக்கம் கோரிக்கை !

சென்னை. ஏப்.5- சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது, இது குறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு: -

இரா.மாணிக்கம்: குளித்தலை தொகுதி, தோகை மலை பகுதியிலிருந்து கரூர் செல்வதற்கு புதிய வழித்தடம் வேண்டும் என்பது அந்தப் பகுதியினுடைய நீண்ட கால கோரிக்கை. ஆகவே,

அமைச்சர் அவர்கள், பில்லூர், பாதிரிபட்டி, தோகை மலை, மைலம்பட்டிபாளையம் வழியாக ஒரு புதிய வழித்தடம் ஏற்படுத்தி புதிய பேருந்து நிலையம் வழங்குவதற்கு ஆவன செய்வார்களா?

அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர்: அண்ணன் மாணிக்கம் அவர்கள் கோருகின்ற வழித்தடத்தில், வேறு பேருந்துகளை நீட்டித்து இயக்க முடியுமென்றால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். புதிதாகத்தான் தேவையென்றால் புதிய பேருந்துகள் வேண்டும். இப்பொழுது வருகின்ற புதிய பேருந்துகள், பழைய பேருந்துகளை, காலாவதியாகின்ற பேருந்துகளை எல்லாம் ஒதுக்கிவிட்டு அந்த இடங்களில் இயக்குவதற்கான நடவடிக்கைதான் தொடர்ந்து எடுக்கப்படுகிறது. புதிய பேருந்து வரும்போது அந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து தலைமைக் கழகத்தால் அறிவிக்கப்பட்ட ஆர்ப்பாட்டம் புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் அன்னவாசல் வடக்கு ஒன்றியம் விளத்துப்பட்டியில் மாவட்டக் கழகச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்ல பாண்டியன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் ஒன்றியச் செயலாளர் ஆர்.ஆர். எஸ்.மாரிமுத்து, தலைமைச் செயற்குழு உறுப்பினர் சுப.சரவணன், பொதுக்குழு உறுப்பினர் ராப்பூசல் எம்.செந்தில் குமார், அரசு வழக்கறிஞர் பூங்குடி சிவா, பொன்.பாரிவள்ளல், சொதமிழினியன், மழவராயன்பட்டி கார்த்தி, பி.வி. எஸ்.பாண்டியராஜா, கிட்டு, ஆர்.ஆர்.எஸ்.எம்.ராஜேஷ், ஜெ.வெங்கடாசலம் உள்ளிட்ட கிளை கழக நிர்வாகிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள், பொதுமக்கள் திரளாக பங்கேற்றனர்.